ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
பக்கங்கள் ~ 08

தரமான முறையில் படப்பிடிப்புக்களுக்கு நாடவேண்டிய இடம்
தாசன்போட்டோ அன் வீடியோ
பிரதான வீதி, இராமநாதபுரம், கிளிநொச்சி
(சி-7802)

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 18 | 02-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 12

# யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுவோரை கண்காணிப்புக்குழு கையாள்வதே பொருத்தமானது!

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்கள் அல்லது சம்பந்தப் படுபவர்களைக் கையாள்வது சர்வதேசப் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவாகவே இருப்பது பொருத்தமானது. இது குறித்து உங்களுக்கு நாம் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புருவ் ஹொவ்டே அவர்களுக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

இக்கடிதத்தில் மேலும் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறியமைக்காக எமது நீதித்துறையின் சட்ட நடைமுறைகளுக் கமைய தடுப்புக் காவலில் வைக் கப்பட்டிருக்கும் இராணுவச் சிப் பாய் மற்றும் பொலிஸ் உத்தி யோகத்தர் ஆகியோரை எமது நீதித்துறையின் சட்டநடைமுறை களுக்கு ஏற்ப அவர்களை விடு விப்பதற்கான சாத்தியமான முயற் சிகளை நாம் ஏற்கனவே மேற் கொள்ள ஆரம்பித்துவிட்டோம் என அறியத்தருவதாகத் தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்ற சந்திப்பில் கேணல் கருணாவும், கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவரும்.

## அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் இன்று வன்னி வருகிறார்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இன்று வன்னிக்கு வருகை தருகிறார். அவருடன் திருமதி அடேல் பால சிங்கம் அவர்களும் வருகின்றார்.

லண்டனில் இருந்து விமானம் மூலம் கொழும்பு வரும் அவர் அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலம் இன்று கிளிநொச்சிக்கு வரவுள்ளார்.

இவர் வன்னியில் தங்கி யிருக்கும் காலத்தில் பல அரசி யல் இராஜதந்திரச் சந்திப்புக்கள் இடம் பெறவுள்ளதாகத் தெரிய வருகிறது.

## பொருளாதார உடன்படிக்கையை ஏற்படுத்த இந்திய - சிறிலங்கா பிரதமர்கள் முடிவு

சிறிலங்கா- இந்திய பிரதம மந்திரிகள் பரஸ்பரம் பொருளா தாரஉடன்படிக்கை ஒன்றை ஏற்ப டுத்திக் கொள்வது என இணக்கம் கண்டுள்ளனர்.

இந்தியாவிற்கு தற்போது விஜயம் செய்திருக்கும் ரணிலும் இந்தியப் பிரதமமந்திரி வாஜ்பா யும் இந்த பொருளாதார உடன்ப டிக்கைக்கான பூர்வாங்க ஒழுங்கு எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என நேற்று மாலை புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு செய்துள்ளனர். இலங்கை யில் சமாதானத்தை நிலை நாட்டு வதில் இந்தியா அளித்துவருகின்ற உதவி குறித்து ரணில் நன்றி தெரிவித்துள்ளார். இது சம்பந்த மாகத் தொடர்ந்தும் ஆதரவளிப் பதாக இந்தியப் பிரதம மந்திரி உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் மார்ச். 5இல் கிளி. விஜயம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன்புரூ ஹொவ்டே வரும் புதன்கிழமை வன்னிக்கு வருகை தரவுள்ளார். அவருடன் கண்காணிப்புக் குழு வின் புதிய தலைவர் ரெலின்சனும் வருகைதரவுள்ளார்.

இவர்கள் விடுதலைப் புலிக ளைச் சந்தித்து தற்போதுள்ள நில வரங்கள், யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் உட்பட பல விடயங் கள் குறித்துப் பேசவுள்ளனர்.

## களுத்துறைச்சிறையில் தமிழ்க்கைதிகள் விடுதலை கோரி உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை முதல் களுத் துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 87 பேர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று கைதிகள் அறிவித்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலை கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏனைய சிறைச்சாலைகளிலும் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண ணாவிரத போராட்டத்தில் ஈடுபட

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.கள், புலிகள் மார்ச்சில் சந்திப்பு

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் பா.உ. களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சந்திப்பொன்று எதிர்வரும் 7ஆம் திகதி கிளிநொச்சியில் நடை பெறவுள்ளது. இதன்போது தேசி யக்கூட்டமைப்பின் செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர் பாகவும் ஆராயப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

### வீர வணக்கம்

முல்லை மாவட்டத்தில் நேற்று சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்தார்.

மேஜர் அமுத நம்பி (தங்க வேல் பாலசுப்பிரமணியம் / கடாபி, கண்டி, த.மு. 2ஆம் திட் டம் றெட்பானா, விசுவமடு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுத லைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### திருமலை, காங்கேசன்துறை

## துறைமுகப் பகுதிகளில் கடற்படை பாதுகாப்பு அதிகரிப்பு

காங்கேசன்துறை, திருகோண மலை துறைமுகப்பகுதி மற்றும் கடலோரப்பகுதிகளில் சிறிலங்கா கடற்படையின் பாதுகாப்பு நடவ டிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா கடற்படைத் தளபதி தயா சந்தகிரியின் உத்தரவிற்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை இந்திய கடற்படை அதிகாரி களைச் சந்தித்து பேசுவதற்காக இந்தியா சென்றிருந்த சிறிலங்கா

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து தூதுவர் இன்று கிளி. வருகின்றார்!

சிறிலங்காவுக்கான தாய்லாந்துத் தூதுவர் தலைமையிலான குழு வொன்று இன்று கிளிநொச்சிக்கு வருகை தந்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள் ளது.

தூதுவர் ஜேம் றொயினன்ட், வெளிவிவகார அமைச்சின் தொழில் நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுக்கான பணிப்பாளர் பிரதாப் பிபிள் சோக்றம், வெளிவிவகார அமைச் சின் தென்னாசிய, ஆசிய மத்திய கிழக்கு, ஆபிரிக்க விவகாரங் களுக்கான பிரதிப்பணிப்பாளர் மிலிண்டா ஆகியோரே இன்று வருகைதரவுள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நாராயணபிள்ளை சிவபாலன் என்பவரின் சிறுதொகைப் பணமும், அடையாள அட்டையும் அடங்கிய பை தருமபுரம் ம.வி.க்கும் புளியம்பொக்கணைச் சந்திக்கும் இடையில் 28-02-2003 அன்று தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் றியோ நேதிர்ச்சாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(2989)


# கனரக வாகன சாரதிகள் இன்மையால் நியாப் திட்டப் பணிகளில் தாமதம்

(அலுவலகச் செய்தியாளர்)

கனரக வாகனங்கள் செலுத்துவதற்கான அனுபவமிக்க சாரதிகள் இன்மையால் கிளிநொச்சி மாவட்ட நியாப் திட்ட வேலைகள் தாமதமடைந்து செல்வதாக நியாப் திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் கிரேடர், அதிர்பு உருளைகள் இரண்டு, பாரிய குழிகளைத் தோண்டக்கூடிய கனரக இயந்திரம் என்பவை கிளிநொச்சி மாவட்ட நியாப் திட்ட வேலைகளுக்காக எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆனால் இவற்றை இயக்குவதற்கேற்ற சாரதிகள் இன்னமும் வழங்கப்பட வில்லை.

தற்போது, அரசு பத்து நாட்கள் பயிற்சி வழங்கி சாரதிகளை அனுப்பி வைத்துள்ள போதிலும் இவர்கள் வாகனங்களை இயக்குவதில் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## விவசாய திறனாய்வுப் போட்டி

(அலுவலகச் செய்தியாளர்)

கற்சிலைமடு மகா வித்தியாலயத்தில் அண்மையில் பசுந்தளிர் விவசாய திறனாய்வுப் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களமும் இணைந்து இப்போட்டியினை நடத்தியுள்ளன.

இரண்டு சுற்றுக்களாக நடைபெற்ற இப்போட்டியில் பொ. பாஸ்கரன், த.சுகந்தி, சி. மார்க்கண்டு, சி.தர்மராசா, கா.தவநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி ஜெயகுலராசா உட்பட பலர் சிறப்புரையாற்றினர். (அ)

## - பூநகரிப் பிரதேசத்தில் - திலீபன் மருத்துவ சேவையினரின் நடமாடும் மருத்துவ சேவை

(அலுவலகச் செய்தியாளர்)

பூநகரிப் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் நடமாடும் மருத்துவ சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம்வைத்திய கலாநிதி தர்மேந்திரா அவர்களின் தலைமையின் கீழ் பொது மருத்துவம், கண் பரிசோதனை, பற்சிகிச்சை என்பனவற்றிற்கு 795 பேர் சிகிச்சை பெற்றுள்ளதோடு இப்பிரதேச மக்களுக்கு சுகாதார கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

## நியாப் திட்டக் குழுவினர் கிளிநொச்சியில் ஆய்வு

(அலுவலகச் செய்தியாளர்)

திருகோணமலை நியாப் திட்ட அலுவலகக் குழுவினர் கிளிநொச்சியில் உள்ள நியாப் வேலைத்திட்டக் குளங்களை பார்வையிட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வருகைதந்த இக்குழுவினர் சின்னபல்லவராயன் கட்டுக்குளம், பாலன்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகியவற்றுக்குச் சென்று களஆய்வுகளைப் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி நியாப் திட்ட குழுவினர்களின் வேலைத் திட்டம் வெற்றியடைந்து இம்முறை அப்பகுதி விவசாயிகள் இந்தக் குளங்களில் இருந்து அதிக நீரைப்பெற்று பல ஏக்கர் நெற்செய்கையில் ஈடுபட்டு நன்மை அடைவார்கள் என திருகோணமலை நியாப்திட்ட அலுவலகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ)

## கிராம புனர்வாழ்வுக் குழு அமைப்பதற்கான கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கில் மக்கள் மீள்குடியேறி வரும் கிராமங்களில் அக்கிராமங்களைப் புனரமைப்பதற்குப் பொறுப்பாக கிராம புனர்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

கிராம புனர்வாழ்வு அமைப்புத் தெரிவுக்கான கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு ஓமந்தை, மருதங்குளம், பறநாட்டகல், மருதமடு, கள்ளிக்குளம், நொச்சிமோட்டை ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்விற்கு விரும்பியுள்ள மக்களை சமுகமளிக்குமாறு வவுனியா பிரதேச செயலர் சத்தியசீலன் கேட்டுள்ளார். (10)


## சிவராத்திரி நல்வாழ்த்துக்கள்



சமாதானத்தை நோக்கிய எமது பயணத்தில் மலர்ந்த சிவராத்திரி தினத்தில் சமாதானம் நிலவட்டும் என பிரார்த்திக்கின்றோம்.

### தங்கமாளிகை

### ஈருருளி பல்பொருள் உதிரிகள் வாணிபம்

ஹீமாலா, கீரோ மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

யாழ்.சாலை, முருகன் கோவில் அருகில், கிளிநொச்சி.

(2991)


## விபத்தில் சேதம்

பரந்தன் 4 ஆம் கட்டைப் பகுதியில் 'ஹைஎஸ்' வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் கடந்த வியாழன் பகல் இரண்டு மணியளவில் இடம் பெற்றுள்ளது. இதன் போது ஹைஎஸ் வாகனம் சேதத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## மீள் குடியமரும் மக்களுக்கான கூட்டம்

(வவுனியா)

பாலமோட்டை கிராம சேவை அலுவலர் பிரிவில் மீள்குடியமர உள்ள மக்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கோயில் குஞ்சுக்குளம் பாடசாலையில் காலை 10.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு பாலமோட்டையில் மீள்குடியமர விரும்பும் மக்களை குடும்ப புனர்வாழ்வு அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் ஆகிய வற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10)

## கலந்துரையாடல்

(அலுவலகச் செய்தியாளர்)

வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல கல்வி வலயங்களையும் சார்ந்த தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை தவறாது சமுகம் தருமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.


மாணவர் படை முதல் மாவீரன் வீரவேங்கை அனுதன் அவர்களின்

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 23 . 10 . 1983



தாயக மண்ணில் 02 . 03 . 2000

### வீரவேங்கை அனுதன்
### நடராசன் அனுதன் நடராசன்

மண்ணின் விடுதலைக்காய்
மாணவர் படைதனில் இணைந்தீர்
மாண்புமிகு வீரனாய்
மாநிலம் போற்றிட விளங்கினீர் - இன்று
மனங்களில் நிலைத்திடும்
மாவீரர் ஆகினீரே!
எங்கள் அன்புச் செல்வமே! அனு
நீ இல்லை என்ற செய்தி - எம்மை
நிலைகுனிய வைத்ததடா
நிதம் எம் விழிகள்
நீரைச் சிந்துதடா நீ மறைந்த நாள் நாம்
நிம்மதியை இழந்த நாளன்றோ
உன் நினைவு நாளில் - எம்
உதிரம் கொதிக்குமடா
கண்மணியே! எம் செல்வம்
ஈராண்டு கடந்தாலும் - அனு - உம்
நினைவு அழிந்திடாது.

இந்நாளில் வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரரையும் நினைவு கூருகின்றோம்.

02-03-2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

முகவரி:
167, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

தகவல்,
அண்ணன் ஜெயந்தன்,
அப்பா J.P. நடராசா,
அம்மா நகுலேஸ்வரி, அண்ணாமார்,
அக்காமார், அத்தான்மார், அண்ணி,
தங்கைமார், தம்பிமார், சித்தப்பாமார்,
சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மா.

(சி-7586)



## 14 ஆம் ஆண்டு நினைவில்



### மேஜர் கமல்

அருணாசலத்தேவர் சுந்தரராஜன்
(மருதநகர், 4 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)

தாய் மடியில் 11 - 10 - 196[illegible]

தாயக மண்ணில் 02 - 03 - 1989

தாயக விடுதலை பெரிதென்றாய்
தாயைவிடத் தாய்நாடு பெரிதென்றாய்
தாய்வாழத் தமிழீழம் வேண்டுமென்றாய்
தமிழ் வாழவே தலைவன் வழியேகினாய்
தாயகம் வெல்லச் சென்ற உன்பயணம்,
ஈரேழு ஆண்டுக்கு முன்சென்றாலும்,
உன்சந்ததியோடு சேர்ந்து
உன்பணி தொடர்கின்றோம்.
தாயகம் வெல்வோம். இது உன்மேல்
நாம் எடுக்கும் உறுதி.

குடும்பத்தினர்

(2747)

# 30 மில்லியன் நிலக் கண்ணிவெடிகள் 44 நாடுகளில் அகற்றப்பட்டுள்ளன

## – சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

**நாற்பத்தி நான்கு நாடுகளில் கடந்த நான்கு வருட காலப்பகுதியில் முப்பது மில்லியன் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. ஒட்டாவா உடன்படிக்கைக்கு அமையவே இப்பணி இடம் பெற்றுள்ளது.**

உலகில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைக்காக கடந்த 1999 ஆம் ஆண்டில் ஒட்டாவாவில் நாடுகளிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந் தத்தில் கைச்சாத்திட்ட நாடுகள் கண்ணிவெடிகளை அழிக்க உறுதி பூண்டிருந்தன.

நிலக்கண்ணி வெடிகளை அகற்ற நாற்பத்தைந்து நாடுகள் முன்வந்த போது அவற்றிற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் முடிவுக்கு வந்திருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் சில நாடுகள் இவ்விடயத்தில் போதிய அக்கறையெடுத்து செயற்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. துர்க்மெனிதான் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை இதுவரை பூர்த்தி செய்யவில்லை.

அதேசமயம் இத்தாலி 7.1 மில்லியன் நிலக் கண்ணிவெடிகளையும் சுவிச்சர்லாந்து 3.9 மில்லியன் நிலக்கண்ணி வெடிகளையும் பிரிட்டன் 2.1 மில்லியன் கண்ணி வெடிகளையும் அகற்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




துருக்கி ஸ்கென்டிரன் துறை முகத்தில் "பட்ரியட்" என்ற ஏவுகணை தாங்கிய கப்பல் நங்கூரமிடப்படுகிறது.




ஈராக் யுத்த முனைக்கு தொடர்ந்து வருகை தரும் அமெரிக்க கடற்படைக் கெதிராக பஹ்ரெயினில் "யுத்தம் வேண்டாம்" என்ற பதாதைகளுடன் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மக்கள்.

## பதுங்கு குழிகள் அமைப்பு

ஈராக்கில் மக்கள் தம்மை யுத்தத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நிலத்தின் கீழான பதுங்கு குழிகளை அமைத்து அதனைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.



ஈராக்கிய சனாதிபதி சதாம் ஹுசைன் பாக்தாத்தில் அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொள்கிறார்.

# வளைகுடாவில் யுத்தம் ஆரம்பமானால் 1.23 கோடி தொழிலாளர் வெளியேறுவர்

## -சர்வதேச தொழிலாளர் அமைப்பு கவலை

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் வளைகுடாப் பிராந்தியத்திலிருந்து ஒரு கோடி 23லட்சம் வெளிநாட்டு தொழிலாளர்கள் வெளியேற வேண்டிய நிலை உருவாகும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டால் அந்த நாட்டிலிருந்து வெளியேறும் அகதிகளுடன் சுமார் 70 ஆயிரம் வெளிநாட்டு தொழிலாளர்களும் சேர்ந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக மாபெரும் உதவி வழங்கும் நிறுவனமான சர்வதேச வெளிநாட்டு தொழிலாளர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆரம்பத்தில் யோடானுக்கு செல்லவிருக்கும் தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு இரண்டு கோடியே அறுபது லட்சம் டொலர்கள் தேவைப்படும் என இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது ஆறு மாதங்களுக்கு இந்த புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுவரை சர்வதேச வெளிநாட்டுதொழிலாளர் நிறுவனம் ஐந்து லட்சம் டொலரை அன்பளிப்பாக நாடுகளிடமிருந்து பெற்றுள்ளது.

நிலைமைமோசமடையும் பட்சத்தில் வளைகுடாவில் தற்போது பணியாற்றிவரும் ஒரு கோடியே 23லட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி சொந்த நாடுகளுக்குச் செல்லத் தீர்மானிப்பார்கள் என இந்த நிறுவனத்தின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிலும் ஏனைய வளைகுடா நாடுகளிலும் வேலை பார்ப்பதன் மூலம் தங்கள் குடும்பங்களுக்குப் பணம் அனுப்பிவரும் வெளிநாட்டு தொழிலாளர்களில் அனேகமானோர் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

# கொலம்பியாவில் மீட்கப்பட்ட ஒளிநாடாவில் புதிய தகவல்கள்!

கொலம்பியா விண்கலம் விண்ணில் வெடித்துச் சிதறுவதற்கு சற்று முன் அதனுள் எடுக்கப்பட்ட வீடியோ ஒளிநாடாவொன்றை நாஸா வெளியிட்டுள்ளது.

இந்த ஒளிநாடா விபத்தில் சிதறிய பாகங்களிடையே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. கடந்த சில வாரங்களுக்கு முன் இந்தியப் பெண் விஞ்ஞானி கல்பனா சாவ்லா உட்பட 07 விண்வெளி வீரர்களுடன் விண்வெளி ஆய்வை முடித்து பூமிக்குத் திரும்பிய போது கொலம்பியா ஓடம் வெடித்துச் சிதறியது தெரிந்ததே.

இது வெடித்துச் சிதறுவதற்கு சற்று முன்னதாக 13 நிமிடங்கள் ஓடக் கூடிய வீடியோப் படம் ஒன்று எடுக்கப் பட்டுள்ளது. இதில் கல்பனா சாவ்லா கைகளை அசைத்த படியும் மற்றைய வீரர்கள் சிரித்துக் கொண்டிருப்பது போலவும் உள்ள காட்சிகள் பதிவாகியுள்ளன.

ஆனால் அதிசயிக்கத்தக்க வகையில் கொஞ்சமும் சேதமடையாத இந்த வீடியோ கசட் கடந்த 06 ஆம் திகதியன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த வீடியோ கொலம்பியா விபத்துக் குறித்த விசாரணைக்குப் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிஜியில் இன மோதல்கள் வெடிப்பு இந்திய வம்சாவளியினர் வெளியேற்றம்

பிஜியில் இன மோதல்கள் வெடித்ததையடுத்து அந்நாட்டிலிருந்து இந்திய வம்சா வளியைச் சேர்ந்த தொழில் நிபுணர்களும், மேலாண்மை நிபுணர்களும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அதனால் அந்நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டு இருக்கின்றது என அந்நாட்டு ரிசேவ் வங்கி கூறியுள்ளது.

பிஜியில் தகுதியான வேலை வாய்ப்புக்கள் குறைந்து கொண்டு வருவதும் ஊதியம் குறைவாக இருப்பதும்கூட இந்திய வம்சாவளியினர் வெளியேறக் காரணமாகும்.

பிஜியில் 8,20,000 பூர்வகுடிகள் உள்ளனர். மக்கள் தொகையில் இது 52 சதவீதம் இந்திய வம்சாவளியினர் தொகை, மொத்த மக்கள் தொகையில் 441 வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கட்டடவியலாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் உட்பட 76,000 பேர் பிஜியைவிட்டு வெளியேறிவிட்டனர். இவர்களில் 89 சதவீத பேர் இந்திய வம்சாவளியினர்.

அந்நாட்டின் பூர்வகுடிகள் 1987இல் ஆயுதம் தாங்கிய புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றினர்.

அதையடுத்து இந்திய வம்சாவளியினருக்கும் பிஜி பூர்வ குடிகளுக் கும் இடையே மோதல் தீவிரம் அடைந்து வருகின்றது.

2000ஆம் ஆண்டில் நடந்த மற்றொரு புரட்சியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர சௌத்திரியின் அரசு கவிழ்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஒத்திவைப்பு

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் வழக்கு விசாரணை இம்மாதம் 17 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பூந்தமல்லி நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

## அ.தி.மு.க. வெற்றி

(சென்னை)

தமிழகத்தின் சாத்தான் குளம் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்றுள்ளது.

அ.தி.மு.க.வின் நீலமேக வர்ணத்துக்கு 56945 வாக்குகளும் காங்கிரஸ் போட்டியில் மகேந்திரனுக்கு 39451 வாக்குகளும் கிடைத்தன. நீலமேக வர்ணம் 17494 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டினார்.

# காஷ்மீர் பகுதியில் இளைஞர்கள் காணாமல் போகும் சம்பவம் அதிகரிப்பு

## - அரசின் மீதும் சந்தேகம்

(புதுடில்லி)

இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பிரதேசத்திலிருந்து இளைஞர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக பிராந்தியப் அரசு அறிவித்துள்ளது.

அண்மைக் காலத்தில் 3,744 பேர் காணாமல் போயுள்ளதாகவும் இவர்களில் அனேகர் இருபது வயதுக்கு குறைந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது

இவர்கள் அனைவரும் போராளிக் குழுக்களுடன் சேர்ந்து இராணுவப்பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தான் பிரதேசத்துக்குப் போயுள்ளார்கள். பிராந்திய பாராளுமன்ற விவகார அமைச்சர் அப்துல் ரஹ்மான் வீகி இதனைக் கூறினார்.

இதற்கு முன்னரும் இதே போன்று பெரும் தொகையான காஷ்மீர் இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க காஷ்மீர் இளைஞர்கள் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே காணாமற்போயுள்ளனர். என காஷ்மீர் மனிதாபிமான அமைப்புக்கள் அரசைக் குற்றம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# சில அணிகள் சுப்பர் சிக்ஸிற்குள்; பல அணிகளுக்கு இறுதிவரை போராட்டம்!

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதலாம் சுற்றுப் போட்டிகள் முடிவடைவதற்கு இன்னமும் மூன்று தினங்கள் மட்டுமே இருக்கும் நிலையிலும் அடுத்த சுற்றான 'சுப்பர் சிக்ஸ்' போட்டிக்குள் நுழையும் அணிகள் ஓரிரண்டைத் தவிர ஏனையவை குறித்து முதலாம் சுற்று முடிவடையும் வரையில்



காத்திருக்க வேண்டியதொரு நிலையே காணப்படுகின்றது.

'ஏ' பிரிவைப் பொறுத்து அதில் இடம்பெறும் அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, சிம்பாப்வே, நமீபியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அவுஸ்திரேலிய அணி மட்டும் சுப்பர் சிக்ஸிற்குள் எதுவித இடையூறும் இன்றி நுழைந்துள்ளது. அது விளையாடிய ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்றதினால் இருபது புள்ளிகளைப் பெற்றுள்ள அவுஸ்திரேலிய அணி தனது உறுதியான நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

'ஏ' பிரிவில் நேற்று இரவு இடம்பெற்ற போட்டி முடிவுகள் பற்றிய புள்ளிகள் சேர்த்துக்கொள்ளப்படாத நிலையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இவ்விரண்டாவது இடம் மொத்தப் புள்ளிகள் (16) அடிப்படையிலும், ஓட்ட விகிதாசார ரீதியிலும் இருப்பதினால் இந்திய அணியும் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் வாய்ப்பு ஓரளவு பிரகாசமானதாக உள்ளது என்றே கொள்ளலாம்.

கிரிக்கெட்டில் எதுவும் நிகழலாம் என்ற ரீதியில் இந்திய - பாகிஸ்தான், அவுஸ். - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் இரண்டிலும் ஏதும் அதிசயங்களும், அதிர்ச்சிகளும் ஏற்பட்டால் அன்றி இந்தியா சுப்பர் சிக்ஸிற்குள் நுழைதல் என்பது பெரும்பாலும் உறுதியானதொன்றாகவே உள்ளது.

அதாவது, பாகிஸ்தான் அணியிடம் இந்தியா படுதோல்வி அடைவதோடு, அவுஸ். அணியை இங்கிலாந்து படுதோல்வியுறச்செய்வதன் மூலம் இந்திய சுப்பர் சிக்ஸிற்குள் நுழைவதற்குக் குந்தகம் ஏற்படும் நிலை உள்ளது.

அடுத்ததாகப் பாகிஸ்தான் அணியின் நிலையானது நேற்றிரவு இடம்பெற்ற போட்டியில் பெரிதும் தீர்மானிக்கப்பட்ட தொன்றாகிவிடும். அதாவது, இந்தியாவை நேற்றிரவு வெற்றி கொண்டிருந்தால் அன்றி பாகிஸ்தானின் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் வாய்ப்பு பெரிதும் குறைந்ததாகவே இருக்கும். இதற்கு அடுத்த போட்டியில் சிம்பாப்வேயை பாகிஸ்தான் வெற்றி கொள்ளும் என வைத்துக் கொண்டாலும்; இந்தியாவுடன் தோல்வியைச் சந்திக்க நேரிடின் பாகிஸ்தான் ஓட்ட வீதம் அதிகரிக்க வாய்ப்பில்லை. அதாவது, இப்போது நான்காவது இடத்தில் இருந்து (ஓட்ட வீதம்) அதனைப் பெரியளவில் முன்னோக்கிச் செல்வதற்கு உதவப்போவதில்லை. ஆகையினால், சுப்பர் சிக்ஸ் போட்டிக்குள் நுழைய பாகிஸ்தானுக்கு நேற்றைய போட்டியிலும், மார்ச் - 04 இல் நடைபெறவுள்ள சிம்பாப்வேயுடனான போட்டியிலும் வெற்றி கொள்வது அவசியமாகியுள்ளது.

**ஜெயராஜ்**

அடுத்ததாகச் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிப்பதற்கு பெரும் முயற்சி செய்த நாடாக இங்கிலாந்து உள்ளது. ஆனால், பெப். 26 இல் இந்தியாவுடன் நடந்த போட்டியில் அது சந்தித்த தோல்வியானது ஓரளவிற்கு அதன் கனவைக் கலைத்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில், இ ங்கிலாந்து அணி இனி சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிக்க வேண்டுமானால், தனது வெற்றியில் மட்டுமல்ல, பிறரது வெற்றி தோல்வியிலும் தங்கியிருத்தல் / எதிர்பார்த்திருத்தல் அவசியமாகியுள்ளது.



அதாவது, அவுஸ் திரேலிய அணியை வெற்றி கொள்வது மட்டுமல்ல, பாக். அணி இந்தியாவிடம் தோல்விகாண வேண்டும் என்றதொரு நிலையில் அதன் நிலை உள்ளது. ஆனால், இங்கிலாந்தின் கிரிக்கெட்டில் அரசியல் தலைகாட்டியதால் இங்கிலாந்திற்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்து சுப்பர் சிக்ஸ் பற்றி கனவொன்றைக் காணக்கூடிய நிலையில் சிம்பாப்வே அணியும் உள்ளது. இங்கிலாந்து சிம்பாப்வேக்கு விளையாடச் செல்லாத நிலையில் பெற்றுக் கொண்ட நான்கு புள்ளிகளுடன் இதுவரையில் 12 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள சிம்பாப்வே 'ஏ' பிரிவில் முதற் சுற்றில் இறுதியான போட்டியில் மார்ச் 04இல் பாகிஸ்தானுடன் மோதவுள்ளது. இதில், பாகிஸ்தானை சிம்பாப்வே வெற்றி கொள்ளும் பட்சத்தில் சிம்பாப்வே சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிக்க வாய்ப்புண்டு. அது மாத்திரமல்ல அவுஸ்திரேலியாவிடம் இங்கிலாந்தும், இந்தியாவிடம் பாகிஸ்தானும் படுதோல்வி அடையும் பட்சத்தில் சிம்பாப்வே பாகிஸ்தானிடம் கடும் போட்டி ஒன்றில் தோல்வி அடையுமானால், பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகியவற்றுடன் சுப்பர் சிக்ஸிற்குள் நுழைவதற்கு ஓட்ட

(5ஆம்பக்கம் பார்க்க)

# திறமைக்கு களமமைத்த தமிழீழ பெருவிளையாட்டுப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடாத்தப்பெற்ற பெரு விளையாட்டுப்போட்டி இம்முறை தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களின் பங்களிப்புடன் இனிதே நிறைவெய்தியுள்ளது.

கடந்த வருடம் போலவே கேடயங்கள் சோடிசோடியாகவே இம்முறையும் கைப்பற்றப்பட்டன. கடந்த வருடம் மேஜர் அல்பேட் வெற்றிக்கேடயத்தையும், லெப். கேணல் விக்ரர் ஞாபகார்த்தக்கேடயத்தையும் மன்னார் மாவட்டம் சுவீகரித்தது. கேணல் சங்கர் ஞாபகார்த்த கேடயத்தையும் மேஜர் சோதியா

## இறுதிப்போட்டிகள் பற்றிய பார்வை

வெற்றிக்கேடயத்தையும் முல்லைத்தீவு மாவட்டம் சுவீகரித்தது.

கடந்த வருடம் பிரதேச ரீதியாக இவ்விளையாட்டுப் போட்டி நடத்தப்பெற்றிருப்பினும் மல்லாவிப் பிரதேசமும் புதுக்குடியிருப்புப் பிரதேசமும் முல்லை மாவட்டத்திலேயே உள்ளடங்குகின்றன.

இவ்வருடம் மேஜர் அல்பேட் கேடயம், மேஜர் சோதியா கேடயத்தை யாழ். மாவட்ட அணியும் கேணல் சங்கர் கேடயம், லெப்.கேணல் விக்ரர் கேடயம் என்பனவற்றை திருமலை அணியும் சுவீகரித்தன. இந்த இறுதிப் போட்டிகளில் வலைபந்தாட்டம், மற்றும் கரபந்தாட்டம் என்பன ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பதே உண்மை. இறுதிப்போட்டி என்பது இறுதிவினாடிவரை யார் வெல்வார் என்று கூறமுடியாதளவுக்கு இருக்கவேண்டும். ஆனால் வலைபந்தாட்டத்தின் முடிவு பரிதாபகரமாக இருந்தது. 64-12 என்ற புள்ளி அடிப்படையில் மன்னார் அணி தோற்றது. எனவே இந்தப் போட்டியில் வென்றதன்மூலம்தாங்கள் பலமான அணி என யாழ். அணி கருதிவிடக்கூடாது "நாடளாவிய ரீதியில் போட்டியிடக்கூடிய தகுதிக்கு தம்மை மேலும் வளர்த்துக்கொள்ளவேண்டும்"

கரபந்தாட்டத்தைப் பொறுத்தவரை 5செற்களும் போட்டி நடைபெறவேண்டும் என இறுதிப்போட்டியை காணவந்த ரசிகர்கள் ஆவலுடன் இருந்தனர். ஆனால் 4ஆவது சுற்றுடனேயே மன்னார் அணி. களத்தைவிட்டு அகல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏதோ மூன்றாவதையாவது வென்று ஓரளவு கௌரவத்துடன் வெற்றியை விட்டுக்கொடுத்தது அந்த அணி. யாழ். அணியைப் பொறுத்தவரை வடகிழக்கு மாகாணத்தின் பலமான அணியான அம்பாறை அணியை வென்றதன் மூலம் முதற்போட்டியிலேயே மேஜர் அல்பேட் கேடயம் தமக்குத்தான் என்பதை முரசறைந்து கூறிவிட்டார்கள். அவர்களுக்கு ரசிகர்களின் பாராட்டுகள். மென்மேலும் தொடர்பயிற்சிகள் மூலம் தம்மை அவர்கள் புடம்போட வாழ்த்துக்கள்!

இதேபோலவே உதைபந்தாட்டமும் அமைந்திருந்தது. ஒப்பீட்டளவில் இப்போட்டி ஓரளவுக்கு ரசிக்கக்கூடியதாக இருந்தது. டிக்கோணி,டிக்கோணி என்று ரசிகர்களின் வாய்கள் உச்சரித்த வண்ணமிருந்தன . ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் திருமலை வீரர் வாஹித் கோல் போட்டார். அதைத்தொடர்ந்து ஆட்டம் ஓரளவு சூடு பிடித்தது. ஆட்டத்தின் பிற்பகுதியில் மன்னார்அணி தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்தியது.

ஆனால் அதிஷ்டம் கைகொடுக்கவில்லை. நான்கு மூலை உதைவாய்ப்பு உட்படபல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் வெற்றித்தேவதை அவர்கள் பக்கம் திரும்பிப்பார்க்க வில்லை. இப்போட்டியில் இரு அணிகளிலும் தலா ஒரு வீரர் ஒழுக்காற்று நடவடிக்கையாக சிவப்பு அட்டைகாட்டி வெளியேற்றப்பட்டனர். மேலும் ஒரு மன்னார் வீரருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது எனினும் இந்த ஆட்டம் பெரும்பாலும் நட்புணர்வுடன் நடைபெற்றது. திருகோணமலை அணியினரின் சிறந்த பந்துப்பரிமாற்றமே அவர்களின் வெற்றிக்கு வகுத்தது. இதில் ஆட்டநாயகராக தெரிவு செய்யப்பெற்ற 37வயதான திருமலை அணித்தலைவர் வசந்தனின் ஆட்டம் சிறப்பானதே.

இந்த இறுதிப்போட்டியை விட வவுனியா அணி, கிளிநொச்சி அணி ஆகியவற்றுடன் நிகழ்ந்த போட்டிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன என்றால் மிகையல்ல. வவுனியா அணியுடனான போட்டியில் வசந்தன் அடித்த மூலைஉதை நேர்த்தியான கோலாக மாறியது. அதைப்போலவே கிளிநொச்சி அணியுடனான போட்டியும் சிறப்பானதாக அமைந்திருந்தது. இச்சுற்றுப்போட்டியில் திருமலை அணிக்கெதிராக கோல் போட்டஒரேஅணி கிளிநொச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

**நசிகேதன்**

4-2 என்ற கோல்கணக்கில் தோற்றிருந்தாலும் முதல் கிளிநொச்சி அணியேகோல் போட்டது.இதன் மூலம் கிளிநொச்சி அணி தம்மை அடையாளப்படுத்தியுள்ளது.

மென் பந்து கிரிக்கெட் போட்டியில் திருமலை அணி வெற்றி பெற்றது. அம்பாறை அணியுடனான அரையிறுதிப் போட்டியில் 12 பந்துகள் இருக்கும் போது 6 ஓட்டங்களே அம்பாறை அணி பெற வேண்டி இருந்தது. எனினும் தமது திறமையான பந்து வீச்சு களத்தடுப்பின் மூலம் ஒரு ஓட்டத்தினால் திருமலை அணி வெற்றி பெற்றது. இந்த அணி வீரர் அப்துல் முத்தலிப் ஹறிஸ் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் தமது திறமையை வெளிப்படுத்தி கேடயத்தை திருமலைக்கு கொண்டு செல்ல வகுத்தார். மென்பந்து கிரிக்கட் போட்டி அடுத்த வருடம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தரத்துக்கு எமது வீரர்களை உருவாக்கும் பொருட்டு லெதர்போலே அடுத்தவருடம்பயன் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இந்த வருடம் யாழ்.அணியின் சங்கீதா திருச்செல்வம், மயூரதன் திருமலையின் வசந்தன், அப்துல்முத்தலிப் ஹறிஸ் ஆகியோரின் பெயர்கள் இம்முறை உச்சரிக்கப்பட்டன. அடுத்தவருடம் தமது பெயரை உச்சரிக்க யார் யார் முயல்கின்றார்களோ; அவர்களுக்கும்அவர்களின் அணிகளுக்கும் முன்கூட்டியே எமது வாழ்த்துக்கள்!.

# கிராம மக்களின் வாழ்வை உயர்த்தும் ஊரக வளர்ச்சிப் பணி

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு ஒருசில நகரங்களைத் தவிர பெரும்பாலான பிரதேசங்கள் கிராமங்களாகவே காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தின் முக்கிய தொழில்களாக விவசாயமும், கடற்றொழிலும் அதனோடிணைந்த தொழில்களும் காணப்படுவதால், கிராம அமைப்பு இங்கு பெருமளவு காணப்படுவதற்கு ஏதுவாகின்றது.

இக்கிராமங்களில் வாழ்பவர்கள் தமது உற்பத்திகள் மூலம் தன்னிறைவு கண்டு ஒரு மட்டுப்படுத்தப்பட்டளவிலான நிலையுடன் காணப்படுகின்றனர்.

ஆயினும், வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் சில.கல்வி, பொருளாதார மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் மிகவும் பின்தங்கிய ஒரு கட்டத்திலேயே இருக்கின்றன.

ஒரு குறுகிய வட்டத்துள்ளான வாழ்க்கையுடன் இவர்களுடைய காலங்கள் கரைந்து போகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் கிராமங்களில் வாழ்பவர்கள் உள்ளவன், இல்லாதவன் என்ற முறைக்குள்ளே வாழ்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

மலரும் தமிழீழத் தேசத்தில் தமிழர்கள் யாவரும் ஒரு மேன்மையான நிலையில் சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக விடுதலைப் புலிகள் இரத்தம் சிந்திப் போராடி வருகின்றனர்.

மக்களுக்கான இந்த போராட்டத்தில் அவர்களிடையேயான ஏற்றத்தாழ்வுகள் இல்லாது உயர்ந்த



நிலையில் ஒரு நிம்மதியான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது அவர்களின் இலட்சியமாக இருக்கின்றது.

இந்த நிலைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு "ஊரக வளர்ச்சிப் பணி நடவடிக்கை"களிலும் விடுதலைப் புலிகளால் தீவிர அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது.

சிங்கள இராணுவத்துக்கெதிரான களமுனைப்போர்களை சந்தித்து வெற்றியீட்டிய அதே போராளிகளில் மிகச் சொற்ப அளவினரால் இந்த ஊரக வளர்ச்சிப் பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்கிராமங்களின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்றவை பூரணமாக்கப்பட வேண்டியதன் அவசியம் கண்டு அவற்றை மேம்பாடு செய்வதன் மூலம். அம்மக்களை சமூகத்தின் உயர்ந்த பிரஜைகளாக இட்டுச் செல்லல்" என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இப்பணி செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களின் அக்கராயன் கிளிநொச்சி, வட்டக்கச்சி, விசுவமடு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மல்லாவி ஆகிய எட்டுப் பிரதேசங்களிலும் இப்பணி இடம்பெறுகின்றது.

இப்பிரதேசத்தில் உள்ள இருபத்தேழு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு 19748 பேரைக் கொண்ட 4471 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இதில் பதினேழு கிராமங்களில் பணிகள் நடைபெற்றுவருகின்றன. ஆனாலும் வன்னிப்பகுதியில் மேலும் கிராமங்கள் இனங்காணப்பட வேண்டி இருக்கின்றன.

இக்கிராமங்கள் தோறும் ஊரக வளர்ச்சிக்குழுக்கள் அமைக்கப்பட்டு சமூக, பொருளாதார, அபிவிருத்திக் குழுவாக இக்குழு செயற்படுகின்றது.

இதில் 11 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக நான்கு உறுப்பினர்களும் கிராமத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஏழு குழுத்தலைவர்களுமாக இணைந்து நடவடிக்கைகள் இடம் பெறும்.

இந்த ஏழு குழுக்களில் ஒவ்வொரு குழுத்தலைவரும் தத்தமது செயற்பாட்டின் மூலம் மக்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபடுவர்.

கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் மன்றம், கல்விக்குழு, பொருளாதாரக் குழு, கலைபண்பாட்டுக்குழு, சுகாதாரக்குழு, விளையாட்டுக்குழு என ஏழு குழுக்களும் தமது பணிகளில் ஈடுபடும்

இதில் பொருளாதாரக்குழுவில் விவசாயம், விலங்கு வேளாண்மை, கைத்தொழில், உட்கட்டுமானம், பயன்தரு உற்பத்தி என பகுதி பகுதியாக செயற்பாடுகள் இடம்பெறும்.

சுகாதாரக்குழுவினர் போசாக்கு, மருத்துவம், குடிநீர், மலசலகூட வசதி எனப் பணிகளில் ஈடுபடுவர்.

தமிழீழ ஊரக வளர்ச்சிப்பணிப் பொறுப்பாளர் அன்பரசனின் கீழான கிராமப்பிரிவுப் பொறுப்பாளர்கள் இக்கிராமங்களில் நேரடியாக இறங்கி மக்களோடு மக்களாக அவர்களது சகல தேவைகளையும் இனங்கண்டு தமது பணி நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

"நாம் மோட்டார் சைக்கிளில் முறுக்கிக் கொண்டு போய் அக்கிராமங்களில் இறங்கினால் எம்மை மக்கள் வித்தியாசமாகவே பார்க்கின்றனர். அதனால் சாதாரணமாக துவிச்சக்கர வண்டிகளிலோ அல்லது நடந்தோ சென்று நாம் அவர்களுடன் கலக்கும் போதுதான் மக்கள் எங்களை நெருங்கி வருகின்றனர். எனவே மக்கள் எப்படி எங்களை பார்க்க விரும்புகின்றனரோ அவ்வாறே சென்று அவர்களை மேம்படுத்திவிட நாம் விளைகின்றோம்" என்கின்றார் ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபடும் போராளியான திருமகன் அவர்கள்.

முதலில் கிராமம் தொடர்பான அவர்களது பழக்கவழக்கம் பண்பாடு தொடர்பான நிலைப்பாடுகள் ஆராயப்படுகின்றன.

பின்னர் அவர்களின் இந்நடவடிக்கைகளில் எவ்வாறான மாற்றங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆராயப்படுகின்றன.

தொடர்ந்து மக்களுக்கான இலகுவான முறையில் சமூக அபிவிருத்தி பொருளாதாரப் பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

இவர்களுக்கான தேவைகள் இனம் காணப்படும் போது அவை படிப்படியாகவும் உடனடியாகவும், பூரணப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கின்றன

அத்துறை சார்ந்த தொண்டர் அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலமாகச் சம்பந்தப்பட்டவர்களை ஒருங்கிணைத்து பணிகள் இடம்பெறுவதுடன் அதில் வெற்றிகளும் ஈட்டப்படுகின்றன.

இவ்வாறான கிராமங்களுக்கான மக்களின் மருத்துவ சேவையினை ஓரளவு பூர்த்தி செய்வதில் "திலீபன் நடமாடும் மருத்துவ சேவையினர்" வழங்கும் பங்களிப்பானது குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய தொன்றாகும்.

அண்மையில் இக்கிராமப் பணிக்குழுக்களின் உறுப்பினர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கிளிநொச்சியிலுள்ள கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சிலநாட்கள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதன் போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் உட்பட பல்துறைசார்ந்த அதிகாரிகளும் அழைக் கப்பட்டு இவர்களுக்கான அறிவூட்டல் கருத்துக்கள் வழங்கப பட்டன. இக்கருத்தமர்வின் மூலம் தெளிவான ஒருநிலை யினை அடைந்த பணிக்குழுவினர் தமது பணிகளைக் கிராமம் தோறும் செவ்வனே செய்வதில் தூண்டலும் உற்சாக மும் அளிக்கப்பட்டனர்.

தற்போதைய சமாதான காலத்தில் அபிவிருத்திப் பணிகள் என்பது இம்மண்ணை நோக்கி வந்து கொண் டிருக்கிறது /வருவதாக உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

இந்த அபிவிருத்திப் பணிகள் இக்கிராமங்களையும் சென் றடைந்து அவர்களும் மேம்பட வழி ஏற்பட வேண்டும். இதற்கு சகல தரப்பினராலுமான ஒத்துழைப்பும் திறம்பட கிடைக்கப் பெற வேண்டும்.

கிராமங்களின் விழிப்புணர்வு பெற்ற குழுக்களும் அக்கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான தேவைகளை சரியாக இனம்கண்டு இச்சந்தர்ப்பத்தினை சரியாகப் பயன்படுத்தி தம்மை வளப்படுத்தி தாமும் இச்சமூகத்தில் உயர்ந்த மனிதர்களாக வாழ வழியினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். □

**ஜெயக்குமார்**

---

## சில அணிகள்

விகித அடிப்படையில் சிம்பாப்வே சிலவேளை போட்டியிடக்கூடும்.

'ஏ' பிரிவில் இத்தகையதொரு நிலை காணப்படுகையில், 'பி' பிரிவில் நிகழ்ந்த எதிர்பாராத சில போட்டி முடிவுகளால் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசம் என்பது' குழப்பங்கள் நிறைந்ததாகிவிட்டது. குறிப்பாக தென்னாபிரிக்காவின் ஆரம்பத் தோல்விகள் (மேற்கிந்திய அணி, நியூசிலாந்து அணி என்பனவற்றிடம்)சிறிலங்கா அணி கென்யா அணியிடம் கண்ட தோல்வியும் 'பி'பிரிவில் பல குழப்பங்களுக்குக் காரணமாக இருந்ததோடு இலங்கை செய்த கோளாறினால் ஓர் பலமான அணியினரின் சுப்பர்சிக்ஸ் பிரவேசம் நெருக்கடிக்குள் ஏன்அற்றுப்போனதொரு நிலை தோன்றி யுள்ளது எனலாம்.

'பி' பிரிவை பொறுத்து இதுவரையில் ஐந்து போட்டிகளில் பங்குபற்றி நான்கு போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் சிறிலங்கா அணி 16 புள்ளிகளைப்பெற்று, முன்னிலையில் உள்ளது. இந்நிலையில், அவ்வணி சுப்பர் சிக்ஸிற் குள் பிரவேசிப்பதென்பது பெரும்பாலும் உறுதிசெய்யப்பட்ட தொன்றாகியுள்ளது. தென்னாபிரிக் காவுடனான போட்டியில் அது தோல்வி கண்டாலும் கூட அதன் சுப்பர் சிக்ஸ் பிரவேசம் பாதிக்கப்படாது என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

அடுத்ததாக 16 புள்ளிகளைப் பெறக்கூடிய வாய்ப்பை அதிகம் கொண்ட அணிகளாக கென்யா அணியும் நியூசிலாந்து அணியும் உள்ளன. பெரும்பாலும் நேற்று இரவு இடம் பெற்ற கென்யா பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் கென்யா வெற்றிபெறுமானால் அதன் 16 புள்ளிகள் மே.இந்திய அணியுடன் மோதுவதற்கு முன்பாகவே உறுதிப்படுத் தப்பட்டதாகிவிடும்.

இதேவேளை கென்யா அணி தனது சுப்பர்சிக்ஸ் பிரவேசத்தை உறுதிசெய்ய வேண்டுமானால் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் தனது ஓட்டவிகித எண்ணிக்கையைஅபரிமிதமாக அதிகரிக்க வேண்டிய கட்டத்தில் உள்ளது. ஏனெனில் கென்யாவின் தற்போதைய ஓட்ட விகிதம் எதிர்கணியமானதாகவே உள்ளது.

அடுத்ததாக நியூசிலாந்து அணியும் 16 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கொண்டதாகவே உள்ளது. கிரிக்கெட் அதிசயங்கள் எதுவும் நிகழாதுவிடில் கனடா அணியை வெல்வதன் மூலம் நியூசிலாந்தின் பிரவேசம் பிரகாசமானதாகவே இருக்கும் ஏற்கனவே நேர்கணியமான அணி ஓட்ட விகிதத்தைக் கொண்டுள்ள நியூசிலாந்து. கனடாவை அதிக ஓட்ட எண்ணிக்கை மூலம் வெற்றிகொள்வதன் மூலம் தமது நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

'பி' அணியில் தற்பொழுது சுப்பர் சிக்ஸிற்குள் நுழைவதற்குத் திட்டவட்டமாகச் சிறிலங்காவுடனான போட்டியில் வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தத்தில் தென்னாபிரிக்க அணியுள்ளது. இதுவரையில் ஐந்து போட்டிகளில் கலந்துகொண்டு மூன்றில் மட்டும் வெற்றிபெற்று. -12 புள்ளிகளை மட்டும் பெற்றுக் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி சிறிலங்காவை வெல்வதன்மூலமே சுப்பர்சிக்ஸிற்குள் இடம் பிடிக்கமுடியும். தென்னாபிரிக்கா தோல்வியடையும் பட்சத்தில் பெரும்பாலும் அதன் சுப்பர் சிக்ஸ் பிரவேசம் கனவாகவே கலைந்துவிடவே வாய்ப்புண்டு. அவ்வாறு இல்லாதுவிடில் நியூசிலாந்தும் கென்யாவும் இனிவரும் போட்டிகளில் தோல்வி அடைதல் வேண்டும்.

மேற்கிந்திய அணியைப் பொறுத்து சுப்பர்சிக்ஸ் பிரவேசம் என்பது கை நழுவிப் போய் விட்டதொன்றாகவே கொள்ளலாம். இருப்பினும் நேற்றைய போட்டியில் பங்களாதேஷிடம் கென்யா அணி தோல்வியைச் சந்தித்துவரும் அதேவேளை, தென்னாபிரிக்காவும் சிறிலங்காவிடம் தோல்வியைச் சந்திக்குமானால் இதுவரை நடந்து முடிந்த போட்டியில் 10 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள மே.இந்திய அணி எஞ்சியுள்ள கென்யாவுடனான போட்டியை யும் வெற்றி கொள்ளுமாயின் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் இதற்கான வாய்ப்பு பிரகாசமானதாக இல்லை.

ஆனால் இவ் உலகக் கிண்ணப் போட்டியில் போட்டி பெரிதும் பாதிக்கப்பட்ட அணி என்றால் அது மேற்கிந்திய அணியாகவே இருக்க முடியும். அதாவது பங்களாதேஷுடனான போட்டி மோசமான வானிலை காரணமாக கைவிடப்பட்டதினால் மேற்கிந்திய அணிக்குப் பாதகமான நிலை ஒன்று ஏற்பட்டது. அதாவது மே.இ.அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை மே.இ.அணிக்குப் பெரிதும் பாதகமாகி விட்டது.

இந்த வகையில் பார்க்கையில் இதுவரை முடிவுற்ற போட்டிகளின் அடிப்படையில் அவுஸ்திரேலியா, சிறிலங்கா என்பன சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசித்து விட்டதாகவும் இந்தியா, நியூசிலாந்து பெரும் வாய்ப்புக் கொண்டவையாகவும் கென்யா என்பன இதுவரையில் வாய்ப்பைத் தவறவிடாதவை ஆகவும் பாகிஸ்தான் (நேற்றைய போட்டியின் முடிவில் தெரிந்திருக்கும்) இங்கிலாந்து சிம்பாப்வே, தென்னாபிரிக்கா என்பன கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியவையாகவு முள்ளன. ஆகையினால் அவுஸ்திரேலியா சிறிலங்கா ஆகியவற்றைத் தவிர சுப்பர்சிக்ஸிற்குள் பிரவேசிக்க மிகுதி நாடுகள் தமது பிரவேசத்திற்காக கடுமையாக உழைக்கவேண்டியவை ஒரு புறம் இருக்கையில், கிரிக்கெட் அதிசயங்கள் எதுவும் நிகழாதும் இருத்தல் வேண்டும். ஆனால் இவையாவற்றிற்கும் மார்ச் நான்காம் திகதி இறுதிக்குள் முடிவு தெரியவந்துவிடும்.

*கிளி–மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரி*

*மேசன், மரவேலை தொழில்சார் பயிற்சி நெறிக்கான*

# விண்ணப்பம் கோரல்

பூநகரிப் பகுதியின் பிராந்திய நிலையம் மூலம் மேற்படி பயிற்சி அளிக்கப்படும்.

1. அகவை :- 18-35 வரையானது.
2. கல்வித்தகைமை :- எழுத, வாசிக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும் (குறைந்தது 6ஆம் ஆண்டு வரையாவது கற்றிருத்தல் வேண்டும்)
3. பயிற்சிக் காலத்தில் மாதம் 1000/= வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 05-03-2003ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

குறிப்பு:- விண்ணப்பங்கள் பூநகரி பிரதேச செயலகம் ஊடாகவும் அனுப்பலாம்.

வன்னேரிக்குளம் வீதி,
ஆனைவிழுந்தான், கிளிநொச்சி.

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி.

(சி.7687)

# விற்பனைக்குண்டு

**உழவு இயந்திரம் 240 சுப்பர் இங்கிலண்ட் புதியது, பெட்டியுடன் விற்பனைக்குண்டு**

தொடர்புகளுக்கு:
முல்லை வீதி
திருவள்ளுவர் (ஜெனனி)
போக்குவரவுச் சேவை
10ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

(சி-7729)

# முக்கிய அறிவித்தல்

## வலுவிழந்தவர்களுக்கு புனர்வாழ்வு வசதிகள்

வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடுக்கோவில், வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள சகல வலுவிழந்தவர்களினதும் விபரங்களைத் திரட்டி அவர்களுக்கு பொருத்தக் கூடிய மறுவாழ்வு வசதிகளையும் வருமான அதிகரிப்புத் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு அவர்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் வெண்புறா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இத்திட்டத்திற்கான நிதியுதவிகளையும் பயிற்சித் திட்டங்களையும் வழங்கி இப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு யூனிசெவ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் முதலிய பன்னாட்டு உதவி நிறுவனங்கள் சம்மதம் தெரிவித்துள்ளன.

எனவே இத்திட்டத்தின் முதன்மைப் பணியாக பயனாளிகள் தெரிவு நடைபெறவுள்ளது.. இத் தெரிவானது முல்லைத்தீவு, நெடுங்கேணி, மாங்குளம், கனகராயன்குளம், பனங்காமம், ஆண்டான்குளம், பூநகரி, பளை, தாளையடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்களிலும் புதுக்குடியிருப்பு கைவேலியிலுள்ள எமது கிளை நிறுவனத்திலும் பங்குனி முதலாம் திகதி தொடக்கும் பதினைந்தாம் திகதிவரை நடைபெறும். ஆகையால் அவ்வப்பகுதியிலுள்ள உடல் ரீதியாக வலுவிழந்தோர் யாவரும் தமக்கு அருகிலுள்ள வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்களுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். வலுவிழந்த குடும்பத்தின் தலைவர் அல்லது தலைவி தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், குடும்ப அட்டை முதலியவற்றுடன் தமக்கருகாமையிலுள்ள எமது தொடர்பகங்களில் தவறாது குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். குடும்ப அட்டை கொண்டு செல்லாதவர்களின் பதிவுகள் நிட்சயம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அத்துடன் இக்காலப்பகுதிக்குள் தங்கள் பதிவுகளைச் செய்து கொள்ளாத எவரும் எமது திட்டத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் உதவிகளுக்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டுவர விரும்புகிறோம்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கல்விவசதிகள், வர்த்தக முயற்சி, குடிசைக் கைத்தொழில், நன்னீர் மீன்பிடிப்பு மற்றும் பல வருமான அதிகரிப்புத் திட்டங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. எனவே ஆர்வமுடைய வலுவிழந்தோர் யாவரையும் தேவையான ஆவணங்களுடன் அருகாமையிலுள்ள எமது தொடர்பகங்களில் தங்கள் பதிவுகளை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வெண்புறா நிறுவனம்**

(சி-7689)

# சித்திரக் கலைஞர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் வெண்புறா நிறுவனம் யூனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பணிகளின் வளர்ச்சியில் மேலுமொரு படியாக சித்திரக் கலைஞர்களை ஊக்குவித்து அதன் மூலம் கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடி பொருட்களின் மாதிரி உருவங்களையும் அவற்றினால் விளையும் ஆபத்துக்களையும் சித்திர உருவில் வெளிக்கொணரும் உபயோகமிக்க பணியினை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வரையப்படும் சித்திரங்கள் யாவும் தெரிவுக் குழுவினால் நன்கு பரிசீலிக்கப்பட்டு பெறுமதியான பணப்பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் அவற்றில் தெரிவாகும் சித்திரங்கள் சுவரொட்டி விளம்பரங்களாக அச்சிடப்பட்டு வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் விநியோகிக்கப்படும். இப்போட்டியில் வயது, பால் வித்தியாசமின்றி பாடசாலை மாணவர் உட்பட சித்திரக் கலையில் ஆர்வமுள்ள ஆண், பெண் சகலரும் பங்கு கொள்ளலாம். சித்திரங்கள் வரைவதற்குரிய பிறிஸ்டல் போட், பல வர்ணங்களடங்கிய சோக் வகைகள் முதலியன இலவசமாக வழங்கப்படும். கலைஞர்களின் வசதிகள் கருதி இதற்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு, நெங்கேணி, மாங்குளம், கனகராயன்குளம், பனங்காமம், ஆண்டான்குளம், பூநகரி, பளை, தாளையடி மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்களில் கிடைக்கக் கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ளவர்கள் கைவேலியில் அமைந்துள்ள வெண்புறா நிறுவனத்தில் இந்த வசதிகளைப் பெற்று தங்கள் ஆக்கங்களைப் படைக்கலாம். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இல. 13 சோமசுந்தரம் வீதி சுண்டிக்குழியில் அமைந்துள்ள எமது கிளையில் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். அவ்வப் பகுதியில் உள்ளவர்கள் அண்மையிலுள்ள எமது தொடர்பகங்களுக்குச் சென்று அங்கிருந்தபடியே தமது ஆக்கங்களை உருவாக்கலாம். பங்குனி முதலாம் திகதியிலிருந்து எமது எல்லாத் தொடர்பகங்களிலும் இது நடைமுறையிலிருக்கும். பங்குனி மாதம் 31ஆம் திகதி வரை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆக்கங்கள் யாவும் கண்ணிவெடி விழிப்புணர்வினை முற்றுமுழுதாக பிரதிபலிக்கக் கூடியனவாக அமைதல் வேண்டும். ஏற்கனவே, நாம் வன்னியிலுள்ள சகல பாடசாலைகளுக்கிடையே நடாத்திய கட்டுரை எழுதுதல், சித்திரம் வரைதல் முதலிய போட்டிகளின் பெறுபேறுகள் பூரண வெற்றியளித்திருப்பதை ஆதாரமாக வைத்து இப்போட்டிகள் நடாத்தப்படுவதினால் சித்திரக் கலைப் பிரியர்களாகிய உங்கள் முயற்சியினால் எமது விழிப்புணர்வுப் பணிகள் மென்மேலும் சிறந்து விளங்கும் என நம்புகிறோம். மேலதிக விபரங்களை தங்களுக்கு அருகாமையிலுள்ள எமது தொடர்பகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெண்புறா நிறுவனம்**

கிளை அலுவலகங்கள்,
கைவேலி,
புதுக்குடியிருப்பு.

தலைமைச் செயலகம்,
பிரதான வீதி,
கிளிநொச்சி.

இல.13சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

சிந்தனைக்கு



இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்துள்ளது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-03-2003

## உலகிற்கு நன்கே புரியும்!

சர்வதேச அரங்கின் முன்னால் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தின் கைதியாக உள்ளார் என்பதை பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் அவரின் உரை வெளிக்காட்டி நிற்கின்றது. இவ் உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், "இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு சிறிலங்கா அரசாங்கம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இப்பேச்சானது ஒரு வகையில் ஐ.தே. முன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பெரும் முயற்சி செய்கின்றது என்ற அர்த்தத்தில் அரசாங்கத்தைப் பாராட்டுவது போன்றும் இருக்கலாம். அன்றி சனாதிபதி என்ற நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் தாம் பங்காற்றுவதாகவும் வெளிஉலகிற்குக் காட்டிக்கொள்வதாகவும் இருக்கலாம்.

சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு பேச்சினை நிச்சயமாக உளப்பூர்வமாகப் பேசியிருக்கவும் மாட்டார். இத்தகையதொரு பேச்சிற்கு அவர் உரித்துடைய ஒருவரும் அல்லர். அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போதைய சமாதான முயற்சிக்கு ஆதரவாகவும் இல்லை. தற்போதைய முயற்சியில் அவரின் பங்களிப்பு எதுவும் இருப்பதாகவும் இல்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அவரது பொ. ஐ. முன்னணியினருக்கும் தற்பொழுது நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் – அதாவது சமாதான முயற்சியில் எதுவித பங்கும் இல்லை. நோர்வே அரசினை மத்தியஸ்தம் வகிக்க தாமே அழைத்ததாக அவர்கள் கூறிக்கொள்வதுண்டு. ஆனால், அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே அது கைவிடப்பட்ட கிடப்பில் போடப்பட்ட விடயமாகிவிட்டது என்பதே வரலாற்று நிகழ்வாகும்.

அது மாத்திரமல்ல, இன்றைய சமாதான முயற்சிகளுக்கு – பொ. ஐ. முன்னணியும் சனாதிபதி சந்திரிகாவும் தொடர்ச்சியாக எதிர் நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளனர். இச்சமாதான முயற்சிகளை எதிர்ப்பதற்கென்றே பல விட்டுக் கொடுப்புக்களுடன் ஜே.வி.பி.யுடன் உடன்பாடு காணும் நிலையிலேயே பொ.ஐ. முன்னணியினரும், சனாதிபதி சந்திரிகாவும் உள்ளனர்.

உண்மையில், சனாதிபதி சந்திரிகா காட்டிவரும் எதிர்ப்பும் – அவர் பெற்றுக் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரமும் இன்று சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன. இதற்கு கடந்த ஆண்டில் சமாதான முயற்சிகளைத் தொடங்கிய போது ரணில் விக்கிரமசிங்க காட்டிய தீவிரத்தைப்போன்று தற்பொழுது காட்டாததினைச் சுட்டிக் காட்டமுடியும். அதாவது, சனாதிபதி சந்திரிகாவின் எதிர்ப்பின் காரணமாகவே ரணில் விக்கிரம சிங்கவினால் தீவிரம் காட்ட முடியாது உள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே.

இவ்வாறானதொரு சூழ்நிலை உள்நாட்டில் நிலவுகையில் – சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுவதாகக் கூறிக்கொள்ள முனைவதானது, சர்வதேச ரீதியில் இனப்பிரச்சினை தீர்விற்குக் காட்டப்படும் அக்கறையை புரிந்து கொண்டுள்ளதன் வெளிப்பாடே ஆகும். அதாவது சமாதான முயற்சியில் காட்டிவரும் தீவிரத்தால் அம்முயற்சிகளுக்கு மாறானதொரு நிலைப்பாட்டை எடுக்க முடியாததொரு நிலை அவருக்கு ஏற்பட்டதே காரணமாகும்.

இந்நிலையில்தான் சனாதிபதி சந்திரிகா தனது உண்மையான நிலைப்பாட்டிற்கும் / செயற்பாட்டிற்கும் மாறான விதத்தில் சமாதான முயற்சிகளில் அரசாங்கம் – அதாவது தம்மையும் உள்ளடக்கியதான அரசாங்கம் – தீவிரமாகச் செயற்படுவது போன்று பேசியுள்ளார். ஆனால், இவ்விடயம் குறித்து உள்நாட்டில் கடந்த காலங்களில் பேசியுள்ள சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு பேச்சினைப் பேசியதாக இல்லை.

சனாதிபதி சந்திரிகா உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டிலும் கூட உண்மை பேசுபவராகவோ மனந்திறந்து பேசுபவராகவோ இல்லை. உண்மைக்கு மாறானவற்றையும், போலியான தோற்றப்பாட்டை ஏற்படுத்தக் கூடியவற்றையுமே பேசுவதுண்டு. ஆனால் ஒன்று, அவர் இன்று உலகால் புரியப்பட்ட ஒருவராக மாறியுள்ளார். அதாவது அவரது பேச்சொன்று செயல் ஒன்று என்பது உலகிற்கு நன்கே தெரியும். இதனைச் சமாதான முயற்சியில் ஈடுபாடு காட்டிவரும் வெளிநாட்டவர்கள் நிரம்பவே புரிந்து கொள்ள வாய்ப்புக்களை அவர் ஏற்கனவே வழங்கியுள்ளார்.

# இந் . சிறிலங்கா ஒத்துழைப்பிற்கு பாலம் அமைப்பது அவசியமாகும்

## இந்திய சனாதிபதி அத்துல் கலாம்

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படவேண்டுமானால் இரு நாடுகளுக்குமிடையில் பாலம் ஒன்று அமைக்கப்படுவது அவசியமாகும் என இந்திய சனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

பாலத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்ததும் இரு நாடுகளுக்குமிடையிலான சமூக மற்றும் கலாசார உறவுகள் அபிவிருத்தி அடையும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ரணிலையும் ஏனைய பிரதிநிதிகளையும் சந்தித்து உரை நிகழ்த்துகையில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கை பற்றி விசாரித்த இந்திய சனாதிபதி, சமாதானத்தை ஏற்படுத்துவது கஷ்டமான விடயம் எனக் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் அர்ப்பண சிந்தையும், அமைதியான நடவடிக்கைகளும் அவசியமாகும் எனக் குறிப்பிட்ட அவர் இதுவரை இடம்பெற்ற சமாதான நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளமையை பெரிதும் பாராட்டியுள்ளார்.

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் 12ஆம் திகதி இலங்கை வருகிறார்

விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையேயான சமாதான முயற்சிகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இவருடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனும் வரவுள்ளார்.

இவர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி அரசாங்கத்தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும், பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் திற்குச் சென்று அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவர் எனவும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பு ஜப்பானில் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப் பேச்சுகளுக்கு சில நாட்கள் முன்னதாக நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் அமைக்கப்பட்ட சிறிலங்கா படை முகாமை அகற்றுக

## - சனாதிபதி சந்திரிகாவுக்குக் கடிதம்

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் நெடுந்தீவு பிரதேச சபைக்கட்டடத்தில் அமைக்கப்பட்ட சிறிலங்கா படையினரின் முகாமை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி இக்கோரிக்கைக் கடிதத்தினை சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சிறிலங்கா சனாதிபதியின் உத்தரவின் பிரகாரமே இந்த முகாம் நிறுவப்பட்டதாகவும் எனவே தான் சனாதிபதியிடம் இந்த வேண்டுகோளை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மூன்றாண்டு அபிவிருத்திக்காக 168 கோடி ரூபா ஒதுக்கீடு

## ஐரோப்பிய ஆணையகம் அறிவிப்பு

(லண்டன்)

இலங்கையின் அடுத்த மூன்று வருட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 168 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஆணையகம் தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுக்கிடையில் இலங்கையில் மேற்கொள்ளப் படவிருக்கும் கிராமிய அபிவிருத்தி, சமாதான செயற்பாடுகள், வர்த்தக அபிவிருத்தி, வியாபார மேம்பாடு, உள்ளூர் விமான சேவை ஆகியவற்றுக்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மேலதிகமாக நிதியுதவி வழங்குவது குறித்து யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் உறுதிப்படுத்தப்படவிருப்பதாகவும் அவ்வாணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# நிதியுதவி

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையை மீளக்கட்டுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 60 மில்லியன் ரூபா நிதியினை வழங்கவுள்ளது.

இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணிகள் மார்ச் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

# கிராம சேவையாளர்கள் பணியில் படையினர் தலையீடு இருக்கக் கூடாது

## - கிராம சேவையாளர் சம்மேளனம் கோரிக்கை

நாடளாவிய ரீதியில் கிராம சேவை அதிகாரிகளுக்கு தரம் 1 ற்கான பதவி உயர்வு வழங்குவதில் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் கிராம சேவை உத்தியோகத்தர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் மேலும், அவசரகாலச் சட்டம் நாட்டில் தற்போது அமுலில் இல்லாத வேளையில் கிராம அதிகாரிகளின் கடமைகளில் படையினரின் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், கிராம சேவை அதிகாரிகளுக்கு தரம் ஒன்றிற்கான பதவியுயர்வு வழங்குவதற்காக கணிக்கப்படும் சேவைக்காலம் 10 வருடத்திலிருந்து 05 வருடமாக குறைக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இக்கோரிக்கையை உள் நாட்டலுவல்கள் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் அலித் அலுவிகாரவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் கே.வாமதேவன் தெரிவித்துள்ளார்

# தாய்லாந்து அரசகுழு இலங்கைக்கு விஜயம்

தாய்லாந்து அரசாங்கத்தின் உயர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சரை நேற்று இக்குழுவினர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இன்று இக்குழுவினர் தலதா மாளிகைக்குச் சென்று தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னாவை சந்தித்துப் பேசவுள்ளனர்..

தொடர்ந்து நாளை இக்குழுவினர் வன்னிக்கும், யாழ். குடாநாட்டுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

# இலங்கை சமாதான முயற்சிகளை சர்வதேசம் உன்னிப்பாக அவதானிப்பு

## பொதுநலவாய செயலாளர் சந்திரிகாவிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் டொன் மக்கினனை நேற்று சந்தித்துச் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும், பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது என சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் அவதானித்து வருவதாக பொது நலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## - புலிகள் இயக்கத்தில் இணைந்த சிறுமி -
## பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்திடம் சேர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட 16வயது சிறுமிஒருவர் அவரின் விருப்பின்பேரில் கல்வி கற்பதற்காக பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

தாய், தந்தையரை இழந்த இச் சிறுமி தனது பாதுகாவலர்களுடன் செல்ல விரும்பாததை யடுத்து அவர் கல்வி கற்பதற்காக இக் கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட் டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையும் 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றனர். பெற்றோரை இழந்து இவ்வாறு போராட்டத்தில் இணையும் சிறுவர்கள் அவர்கள் தங்களுக்கு பாதுகாப்பெனக் கருதும் இடத்தில் கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### தாய்லாந்து...

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலையூடாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய வாகனத்தில் வருகை தரவுள்ள இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திலும் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

பின்னர் இவர்கள் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திக்கவுள்ளனர். சந்திப்பை முடித்துக் கொண்டு தரைமார்க்கமாக இவர்கள் கொழும்பு திரும்பவுள்ளனர்.

# உலகக்கிண்ணக் கிரிக்கெட்
## இந்திய, கென்ய அணிகள் வெற்றி

தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்திய அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.



நாணையச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் பிரகாரம் 50 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 273 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. தொடக்க ஆட்டக்காரரான சயீட் அன்வர் 101 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரார்கள் அதிரடியாகவே ஆட்டத்தை தொடங்கினர். முதல் 15 ஓவர்களில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட இந்திய அணியினர் 45.4 ஓவர்களில் 276 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை எட்டினர். சச்சின் டெண்டுல்கர் 75 பந்துகளில் 98 ஓட்டங்களைப் பெற்றார். யுவராஜ்சிங் 50 ஓட்டங்களையும், ராவிட் 44 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தெரிவானார்.

நேற்று இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கென்யா அணி 32 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்துள்ளது.

### யுத்த நிறுத்த...

விக்கும் அவர் திருகோணமலை மாவட்டத்தில் எமது ஆறு போராளிகள் கைது செய்யப் பட்டுள்ளனர் என்பதோடு, கடந்த பல மாதங்களாக அவர்களை விடுதலை செய்வதற்கான வழிவகைகளை செய்து தருமாறு நாம் உங்களிடம் தொடர்ச்சியாகக் கேட்டுவருகின்ற போதிலும், அப்போராளிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தினரின் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர். எமது வேண்டுகைக்கு இன்று வரையும்எந்தவிதமன பதிலும் கிடைக்காதது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. உண்மையிலேயே யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்கள் அல்லது சம்பந்தப்படுபவர்களைக் கையாள்வது சர்வதேசப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவாகவே இருப்பது பொருத்தமானது. இதுபற்றி நாம் பல தடவைகள் உங்களுக்கு வலியுறுத்தியிருந்தோம். ஒப்பந்தத்தை மீறியவர்களை இருதரப்பினரும் தமது பிரதேசங்களின் சட்ட நடைமுறைக்குட்படுத்துவது இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டினை அர்த்தமற்றதாக்கி விடுவதோடு, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளையும் சீர்குலைக்கும் அபாயம் உள்ளதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம்.

ஆதலினால் இனிவரும் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வது சர்வதேசப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுதான் என்ற தெளிவான நிலைப்பாட்டை உருவாக்கி இரண்டு தரப்பினரிடையேயும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதோடு தடுப்புக்காவலில் உள்ள இரண்டு தரப்பினரையும் சமகாலத்தில் விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விரைவுபடுத்துவது தற்போது எழுந்துள்ள சூழ்நிலையை சுமுகமாக்கிக் கொள்ள உதவுமென நம்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி சந்தித்துப் பேசுவர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுக்கும், ஜே.வி.பி பிரதிநிதிகளுக்கும் இடையில் நாளை மறுதினம் பேச்சுவார்த்தை ஒன்று இடம் பெறவுள்ளது.

இச்சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுக்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கயுள்ளார்.

# கைதடியில் கைது செய்யப்பட்டு காணாமற்போன 24பேர் குறித்து வழக்குத் தொடர முடிவு!

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கக் கூட்டம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது 1996ஆம் ஆண்டு கைதடிப் பகுதியில் சிறிலங்கா படையினர் சுற்றிவளைத்தபோது கைது செய்யப்பட்டு இதுவரை நீதிமன்றத்தில் முன்நிறுத்தப் படாதவர்கள் தொடர்பாக வழக்கு தொடர்வது என முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது நூறு பேர் கைது செய்யப்பட்டதாகவும் ஆனால், அவர்களில் 24பேர் இதுவரை நீதிமன்றில் முன் நிறுத்தப்படவில்லை எனவும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே இவர்களை நீதிமன்றத்தில் முன்நிறுத்தக் கோரி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் தொடரவிருக்கும் வழக்கில் முன்னாள் படையதிகாரிகளும், அரச அதிபர்களும் எதிரிகளாகக் குறிப்பிடப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்கள் தொடர்பாக படிப்படியாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வது என நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### பொருளாதார...

கப்படுகிறது.

தலை மன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே பாலம் ஒன்றை அமைப்பது குறித்து இரு பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிறுவப் படவிருக்கும் இந்தப் பாலத்தினால் இரு நாடுகளும் தனியொரு பொருளாதார வலயத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானப் போக்குவரத்து சுற்றுலாத் துறை ஆகியன பற்றியும் இருவரும் ஆராய்ந்துள்ளனர். அமைச்சர் மிலிந்த மொறகொட வும் பிரதம மந்திரியின் செயலாளரும், புதுடில்லியில் உள்ள சிறிலங்கா உயர் ஸ்தானிகர் மங்கல மொன சிங்க ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்கள்.

### களுத்துறைச்சிறை...

வுள்ளனர்.

இதேவேளை, இந்த அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் அவர்கள் சமாதான செயலக பணிப்பாளர் பேணாட் குணதிலகவை சிறைச்சாலைக்கு வரும் ஏழாம் திகதி அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

# சு. க. அமைப்பாளர் பதவியிலிருந்து 11 பேர் நீக்கப்படுவர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் பதவியில் இருந்து பதினொரு பேர் நீக்கப் படவிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டிய வர்கள் குறித்து தயாரிக்கப்பட்ட பட்டியல் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன விடம் ஏற்கனவே கையளிக்கப் பட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான சனாதிபதிக்குமிக நெருங்கிய மூவரைக் கொண்ட குழுவே இந்த பட்டியலை தயாரித்துள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம். பௌசி, ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே, ரிச்சட் பத்திரன உட்பட்ட கட்சி முக்கியஸ்தர்களின் பெயர்களும் இப்பட்டியலில் அடங்கி உள்ளன.

### துறைமுகப்...

கடற்படை குழுவும் நாடு திரும்பியுள்ளது. கடற்படை நிர்வாகப் பணிப்பாளர் சரத் வீரசேகர தலைமையில் சென்ற இந்தக் குழுவினர் கடற் கண்காணிப்பு குறித்தும் இந்திய கடற்படையினருடன் இணைந்து பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## அறிவித்தல்
### தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

கனேடிய தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பெறும் இலவச கணனிக்கற்கை நெறியின் 2003 ற்கான கற்பித்தல் வகுப்புக்கள் 03.03.2003 திங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருவதுடன் இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டமைக்கான தகவலைப் பெற்றுக்கொண்டோர் தவறாது சமுகம் தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் : சர்வசக்தி பதிப்பக வளாகம்,
யாழ் வீதி, கிளிநொச்சி.

(2993)



## 3ஆம் ஆண்டு நினைவாக

தாயின் மடியில்
23.10.1983



தாயக மண்ணில்
02.03.2000

முதல் மாணவர் படை மாவீரன்

### வீரவேங்கை அனுதன்

ஓயாத அலை மூன்று ஓங்கி அடித்திட
பள்ளிப்பருவத்தில் புள்ளிமானாய் துள்ளிவந்த உன்னை
அள்ளி எடுக்கவென வந்தானோ - காலன்
காலத்தின் தேவைகருதி கண்மூடிப் போனாயோ - அனு
காவியத்து நாயகனாய் - நீ - மண்ணுறங்கும் கல்லறைக்குள் - உன்
கனவுகள் நிச்சயம் நனவாகும்

தகவல் : அண்ணா போராளி
இசையமுதன்/அனுதன்

(2992)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.